## பாடம் 5 : பண்படுத்தும் பழமொழிகள்

**வகுப்பு** : IV

**பாடம்** : **தமிழ்**

### அ. கடினச் சொற்கள்

1. அமுதவாணன்
2. பலூன்கள்
3. யானை
4. சந்தை
5. தாத்தா
6. இன்பவாணன்
7. காய்கறிகள்
8. நாய்கள்

## புத்தகப் பயிற்சி வினாக்கள்

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. அமுதவாணன் தன் தாத்தாவுடன் சென்ற இடம்

அ)கடைத்தெரு ஆ)பக்கத்து ஊர் இ)வாரச்சந்தை ஈ) திருவிழா

2.யானைக்கொரு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) யானை+கொரு ஆ) யானை+ஒரு

இ) யானைக்கு + ஒரு ஈ) யானைக்கு+கொரு

3.பழச்சாறு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) பழம்+சாறு ஆ) பழச்+சாறு இ) பழ+ச்சாறு ஈ) பழ+சாறு

4.நாய் ___________

அ) குரைக்கும் ஆ)குறைக்கும் இ)குலைக்கும் ஈ)கொலைக்கும்

5. ஆசி இச்சொல்லின் பொருள்__________

AAMSKOSAVAPATTY

அ) புகழ்ந்து ஆ)மகிழ்ந்து இ) இகழ்ந்து ஈ)வாழ்த்து

6. கீழ்க்காணும் சொற்களை சேர்த்து எழுதுக

அ) வாரம் + சந்தை = வாரச்சந்தை

இ) பழைமை + மொழி = பழமொழி

**ஆ. வினாக்களுக்கு விடையளி**

1. **அமுதவாணன் யாரிடம் ஆசி வாங்கினான்?**

அமுதவாணன் யானையிடம் ஆசி வாங்கினான்.

2. **'ஆ நெய்' 'பூ நெய்' ஆகியன எவற்றைக் குறிக்கின்றன?**

ஆ நெய் - ஆ + நெய் என்பது பசுவின் நெய்

பூ நெய் - பூ + நெய் என்பது பூவில் ஊறும் தேன்.

3. **"ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" – இப்பழமொழியின் பொருளைச் சொந்த நடையில் கூறுக?**

அகத்தில் போட்டாலும் அறிந்து போடணும் என்பது தான் சரி அதாவது புரியாமல் எதையும் மனனம் செய்து நினைவில் கொள்ளக்கூடாது. கற்கும் போதே தெளிவாகப் புரிந்து கொண்ட பிறகுதான் நினைவில் கொள்ள வேண்டும்.

**இ. பழமொழியை நிறைவு செய்க**

1. யானைக்கொரு காலம் வந்தால் **பூனைக்கொரு காலம் வரும்**
2. **குரைக்கும் நாய்** கடிக்காது.
3. நாயைக் கண்டால் **கல்லைக் காணோம்**
4. கல்லைக் கண்டால் **நாயைக் காணோம்**
5. **ஆற்றில் போட்டாலும்** **அளந்து போடணும்**

AAMSKOSAVAPATTY

## ஈ. படத்திற்கேற்ற பழமொழியைத் தேர்வு செய்க



1. சிறுதுளி பெருவெள்ளம்.
2. யானைக்கும் அடி சறுக்கும்.
3. **காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.**

## உ. முதலெழுத்து மாற்றினால் வேறுசொல்

1. படிக்க நீயும் — விரும்பு
   பாறையை உடைப்பது — இரும்பு
   சுவைத்தால் இனிக்கும் — கரும்பு
   பூ மலரும் முன்பு — அரும்பு
2. கையின் மறுபெயர் — கரம்
   வயலுக்கு இடுவது — உரம்
   பூக்களைத் தொடுத்தால் — சரம்
   புன்னை என்பது — மரம்
3. நீர் இறைத்திடுவது — ஏற்றம்
   புயலோ இயற்கை — சீற்றம்
   தவறு இழைப்பது — குற்றம்
   வீட்டின் உள்ளே — முற்றம்

AAMS KOSAVAPATTY

## ஊ. இணைத்து மகிழ்வோம்.

| | | | |
|---|---|---|---|
| 01 | Talk less work more | 3 | நல்ல அறிவுரை விலை மதிப்பற்றது |
| 02 | No pain no gain | 5 | மின்னுவதெல்லாம் பொன்னல்ல |
| 03 | Good council has no price | 1 | குறைவாகப் பேசு அதிகம் வேலை செய் |
| 04 | Haste makes waste | 2 | உழைப்பின்றி ஊதியமில்லை |
| 05 | All that glitters is not gold | 4 | பதறாத காரியம் சிதறாது |

AAMS KOSA